## வழக்கு தீவிரமடைய வேண்டும்!




பல தொழில் நிறுவனங்களிடமிருந்து 8 ஆயிரம் கோடி ரூபாயை சட்டவிரோதமாக தேர்தல் பத்திரங்கள் மூலமாக, பறித்ததாக நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் உட்பட சில பி.ஜே.பி. தலைவர்கள் மீது பெங்களூருவில் முதல் தகவல் அறிக்கை பதியப் பட்டுள்ளது. ‘வேதாந்தா’, ‘ஸ்டெர்லைட்’ ஆகிய நிறுவனங்களை ரூ 230 கோடி மதிப்புள்ள தேர்தல் பத்திரங்களை வாங்குமாறு இவர்கள் கட்டாயப்படுத்திய தாகவும் அந்தக் குற்றப்பத்திரிகை கூறுகிறது.

இது தொடர்பாக நீதிமன்றத்தில் புகாரளித்தவர் ‘ஜனாதிகார சங்கர்ஷ் பரிஷத்’ என்கிற அமைப்பின் இணைத் தலைவரான ஆதர்ஷ் ஆர்.ஐயர். இந்த வழக்கில் வாதாடி நீதிமன்றத்தில் உத்தரவு பெற்றவர், தொடர்ச்சியாக ‘உபா’ சட்டத்துக்கு எதிராக, தொழிற்சங்க உரிமைகளுக்காக, கர்நாடகாவிலும் தமிழகத்திலும் பல நூறு கூட்டங்களில் பேசி வருபவருமான மூத்த வழக்கறிஞர் பாலன். இவர்தான் பத்திரிகையாளர் கௌரி லங்கேஷ், கல்புர்கி கொலைவழக்கில், அரசு சிறப்பு வழக்கறிஞராக வாதாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஊழலை ஒழிக்க வந்தவர்கள் எனச் சொல்லிக்கொண்டவர்களின் உச்சக்கட்ட ஊழலுக்கு மணி கட்டியிருக்கிறது பெங்களூரு நீதிமன்றம் என சமூக வலைதளங்களில் கருத்துகளைப் பகிர்ந்து வருகின்றனர். இந்த விசாரணைக்கு நீதிமன்றம் தற்போது தடைவிதித்துள்ள நிலையில், நிர்மலா சீதாராமனை வைத்து மீம்ஸ்கள் பரவி வருகின்றன.

## ஃப்ளாஷ்பேக்



பாவலர்.மா.மாடசாமி



### இனமானப் பேராசிரியருக்கு வரவேற்பு!

1993-ஆம் ஆண்டு, விருதுநகர் மாவட்டத்துக்கு, கழகக் கூட்டங்களில் பங்கேற்பதற்காக கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்த இனமானப் பேராசிரியர் அவர்கள் வருகை தந்தார். அவரது வருகையின்போது சுந்தரபாண்டியம் பேரூர் கழகத்தின் சார்பாக, அப்போது கிளைச் செயலாளராக இருந்த நான், அவரை வரவேற்று சிறப்பு செய்தேன். உடன், அப்போதைய விருதுநகர் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வே.தங்கப்பாண்டியன் அவர்களுக்கு சால்வை அணிவித்தேன்.

**– பாவலர்.மா.மாடசாமி, முன்னாள் பேரூர் கழகச் செயலாளர், சுந்தரபாண்டியம், வத்திராயிருப்பு ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ஏழை விவசாயிகளுக்கு நிலம்!


1989-ஆம் ஆண்டு, மற்றும் 1990-ஆம் ஆண்டுகளில் தி.மு.கழகம் ஆட்சியில் இருந்தபோது, வடபாதிமங்கலம் தமிழ்நாடு கரும்பு பண்ணைக்குச் சொந்தமான நிலத்தினை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு விற்பனை செய்திட, அரசு முடிவு செய்தது. அதன்படி, முக்கால் ஏக்கர் நஞ்செய் நிலம் 2,000 ரூபாய் வீதமும், ஒன்றரை ஏக்கர் புஞ்செய் நிலம் 700 ரூபாய் வீதமும் மிக மிக குறைவான விலை நிர்ணயம் செய்து, 1990-ஆம் ஆண்டு மே 27-ஆம் தேதி நடைபெற்ற விழாவில் 4,970 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கினார், கலைஞர்.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** 31

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்!
அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு
குறித்த வரலாற்றைப் பேசும்
எல்லோருக்கும் எல்லாம்!

# பீகாரும் இடஒதுக்கீடும்!



● கர்பூரி தாக்கூர்

*1912-ஆம் ஆண்டு, வங்காள மாகாணத்திலிருந்து பீகார் மற்றும் ஒரிசா மாகாணம் என்ற ஒரு தனி மாகாணம் உருவாக்கப்பட்டது. பின்னர், அது 1936-இல் பீகார், ஒரிசா என்று இரண்டு தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டன. சுதந்திர இந்தியாவில் இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை, பீகார் மாநிலத்தில் பல்வேறு முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சியில் 1931-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்குப் பின்னர் இதுவரை சாதிவாரிக் கணக்கெடுப்பு எடுக்கப்படவில்லை. பலரின் கோரிக்கைகளையும் மீறி, ஒன்றிய அரசு சாதிவாரி மக்கள்தொகையைக் கண்டறிய தொடர்ந்து மறுத்து வருகிறது. இதிலிருந்து வேறுபட்டு, பீகார் மாநிலத்தில் 2022-இல் சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது. கடந்த நூற்றாண்டில் பீகார் மாகாணத்தில் இடஒதுக்கீடு தொடர்பான, சமூக நிலைமைகள் எவ்வாறு இருந்தன?*

1931-இல் பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்த 9 மாகாணங்களில் பீகார் மற்றும் ஒரிசா மாகாணம் கல்வியறிவில் (1000 பேரில் 52 பேர்) கடைசிநிலையில் இருந்தது. அதே வேளையில், பம்பாயில் 110, சென்னையில் 108, வங்காளத்தில் 102 நபர்கள் கல்வியறிவு பெற்றிருந்தனர். ஏனைய வட இந்திய மாகாணங்களைப் போலவே உயரடுக்கில் இருந்த சாதிகளில் ‘காயஸ்தா’, ‘பிராமணர்’, ‘பூமிகார்’, ‘ராஜ்புத்’ ஆகியோர் மற்ற சாதியினரை விடக் கல்வியிலும் வேலைவாய்ப்புகளிலும் ஆதிக்கம் செலுத்தினர்.

பிராமணரை விட இருமடங்கு காயஸ்தா சாதியினர் கல்வியறிவு பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய பீகாரில் 85 சதவிகிதம் உள்ள SC, ST, OBC மக்களை விட காயஸ்தா, பிராமணர், பூமிகார், ராஜ்புத் உள்ளிட்ட உயர்சாதியினர் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் ஆதிக்கம் செலுத்தினர். குறிப்பாக, இன்றைய பீகாரில் 14 சதவிகிதம் உள்ள யாதவ்கள் மிகப் பின்தங்கிய நிலையில் இருந்தனர்.

உண்மைநிலை இவ்வாறிருக்க, தம் சமூகத்தின் பின்தங்கிய நிலை குறித்து கவலை கொள்வோரால், இந்த ஏற்றத்தாழ்வைப் பொறுத்துக்கொள்ள இயலுமா? சுயமரியாதை கொண்ட எவராலும் பொறுக்க இயலாது. உயர்ஜாதியினரைப் போல் மற்றவர்களும் அவர்களது சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தவே விரும்பினர். அதற்கு அவர்கள் செய்த முதல் வேலை, சாதிச் சங்கங்கள் அமைத்து, தங்களை பிராமணர் அல்லது சத்திரியர் என்று கூறிக்கொள்வதுதான். இந்த விஷயத்தில், பீகாரிகளும் விதிவிலக்கல்ல. எடுத்துக்காட்டாக தற்போது ‘இதர பிற்படுத்தப்பட்டோர்’ (OBC) பட்டியலில் உள்ள குர்மிக்கள் தங்களை ‘குர்மி சத்திரியர்கள்’ என்று அழைத்துக்கொண்டனர். ‘பூணூல் அணிதல்’, ‘பசு வணக்கம்’ உள்ளிட்ட ஆரிய மயமாக்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும், சாதிச் சங்கங்கள் ஆரியமயமாக்கலுடன் நின்றுவிடாமல், சமூகப் பொருளாதார நிலையை மாற்றும் உண்மையான கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

எடுத்துக்காட்டாக காவல்துறையில் குர்மிக்களைக் சேர்ப்பதைக் குறைக்கும் பிரிட்டிஷ் அரசின் முடிவை, 1894-இல் நிறுவப்பட்ட ‘**குர்மி சாதி சங்கம்**’ எதிர்த்தது. தங்களைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று கருதி, அரசு நிர்வாகத்தின் கீழ் உள்ள வேலைகளைத் தங்களுக்கு ஒதுக்குமாறும் இச்சங்கம் கோரியது. குர்மி, யாதவ், கோரி ஆகிய மூன்று சாதிகளும் ‘**திரிவேணி சங்கம்**’ என்ற பெயரில் ஒருங்கிணைந்து உயர்ஜாதி ஆதிக்கத்திற்கு எதிராகப் போராட முனைந்தனர்.

பூணூல் அணிவது உள்ளிட்ட ஆரியமயமாக்கல் நடவடிக்கைகளுடன் தொடங்கிய திரிவேணி சங்கம் பிற்படுத்தப்பட்டவர்களை உயர்சாதியினருக்கு எதிராக ஒன்றிணைத்தது. உயர்ஜாதிகளுக்கு இணையான பண்பாட்டு அந்தஸ்தைப் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் உருவாகிய இச்சங்கம் விரைவில் அரசியல், பொருளாதார உரிமைகளைக் கோரும் இயக்கமாக உருமாறியது. உழுபவருக்கு நிலம் சொந்தம், அதிகாரத்தில் பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்குப் பிரதிநிதித்துவம் உள்ளிட்ட சமத்துவத்திற்கான கோரிக்கைகளை முன்வைத்தன.

இதே காலகட்டத்தில் பீகார், ஒரிசாவின் அஹிர், கோப் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய ‘யாதவ மகா சபா’ வயதுவந்த அனைத்து ஆண்களுக்கான வாக்குரிமையை ஆதரித்தது. அப்போது அனைவருக்கும் வாக்குரிமை கிடையாது. பெண் வாக்குரிமை சார்ந்து பிற்போக்காக இருந்த யாதவ மகாசபா சட்டமன்றத்தில் அஹிர், கோப் சமூகங்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லாததையும், அவர்கள் கல்வியில் பின்தங்கியுள்ளதையும் சுட்டிக்காட்டி, அவர்களுக்கு போதுமான இடங்களை ஒதுக்கவேண்டும் என்று சைமன் கமிஷனிடம் கோரியது.

**பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கு இடஒதுக்கீடு வழங்கவேண்டும் என்று கூறிய, முங்கேரி லால் குழுவின் பரிந்துரைகளை 1978-இல் கர்பூரி தாக்கூர் அரசு செயல்படுத்தியது.**

அதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பே 1918-இல் உருவாக்கப்பட்ட ‘சவுத்பரோ கமிட்டி’ அளித்த அறிக்கையில் சட்டப்பேரவைகளில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் போதிய எண்ணிக்கையில் இருக்க வேண்டும் என்று ஏற்றுக்கொண்டது. தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் இருந்தால்தான் அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும், அதேசமயம் கூட்டு நடவடிக்கை எடுப்பதற்கான ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்று கருதியது. அந்த அடிப்படையில் ஒன்றிணைந்த பீகார், ஒரிசா மாகாணத்தில் நான்கு இடங்கள் ஒதுக்கவேண்டும் என்று பரிந்துரைத்தது.

எனினும் மாண்டேகு-செம்ஸ்போர்டு சட்டம் என்றழைக்கப்படும், இந்திய அரசுச் சட்டம் 1919-ஆம் ஆண்டு டிசம்பரில் நிறைவேற்றப்பட்டபோது, அதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் கூட்டு அல்லது தனித் தொகுதிகள் வழங்கும் எவ்வித ஏற்பாடும் இல்லை. இருப்பினும் இந்தச் சட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு மாகாண சட்டப்பேரவைகளிலும், மத்திய சட்டப் பேரவையிலும் நியமனம் மூலம் பிரதிநிதித்துவம் வழங்கும் வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு பிரதிநிதித்துவம் வழங்கும் வழிவகைகள் பீகார் மாகாணத்தைப் பொறுத்தவரையில் செய்யப்படவில்லை.

லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாடுகளுக்கு பின்னர் 175 இடங்கள் இருந்த ஒருங்கிணைந்த பீகார், ஒரிசா மாகாண சட்டப்பேரவையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு (இப்போது பட்டியல் சாதிகள்) 7 இடங்கள் ஒதுக்கப்பட்டன.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இரட்டை வாக்குடன் கூடிய தனித்தொகுதிகள் வழங்குவதை எதிர்த்து, காந்தி உண்ணாவிரதம் இருந்ததைத் தொடர்ந்து அண்ணல் அம்பேத்கருக்கும் மகாத்மா காந்திக்கும் ஏற்பட்ட பூனா ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒருங்கிணைந்த பீகார், ஒரிசா மாகாண சட்டப்பேரவையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு (இப்போது பட்டியல் சாதிகள்) 18 இடங்கள் ஒதுக்கப்பட்டன.

பின்னர் ஒரிசாவும் பீகாரும் தனித்தனி மாகாணங்களாக 1936-இல் பிரிக்கப்பட்டபோது பட்டியல் சாதியினருக்கு 152 இடங்கள் கொண்டிருந்த பீகார் சட்டப்பேரவையில், 15 இடங்களும், 60 இடங்கள் கொண்டிருந்த ஒரிசா சட்டப்பேரவையில் 6 இடங்களும் ஒதுக்கப்பட்டன.

இப்போதும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு என்று தனி இடங்களோ, நியமன இடங்களோ ஒதுக்கப்படவில்லை. குறிப்பாக, தென்னிந்தியாவில் பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு வழங்கப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் போன்று பீகாரிலும் தரப்படவேண்டும் என்று யாதவர்கள், குர்மிகள் மற்றும் கோரி சாதியினரைப் பிரதிநிதித்துவப்படுத்திய திரிவேணி சங்கம் போன்ற அமைப்புகள் தீவிரமாக முயன்றாலும் அக்கோரிக்கைகள் வெற்றியடைவில்லை. விடுதலைக்கு முந்தைய ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் பீகாரின் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் காங்கிரஸ் கட்சியை முதன்மைப்படுத்தி இயங்கியதும் இதற்குக் காரணமாக அமைந்தது.


1952-இல் பீகார் சட்டமன்றத்தில் வேலை வாய்ப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டாலும் தோற்கடிக்கப் பட்டது. ராம் மனோகர் லோகியா, கர்பூரி தாக்கூர் ஆகியோரின் வருகைக்குப் பின்னரே இந்நிலை மாறியது. அரசு வேலைகளில் பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கு இடஒதுக்கீடு வழங்கவேண்டும் என்று கூறிய, முங்கேரி லால் குழுவின் பரிந்துரைகளை 1978-இல் கர்பூரி தாக்கூர் அரசு செயல்படுத்தியது.

**...குரல் ஒலிக்கும்**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

618

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.